# நவம்பர்– 01 –வியாழன்

## அனைத்துப் புனிதர்கள்

### “வெண்மையான தொங்கலாடை அணிந்துள்ள இவர்கள் யார்” – தி.வெ 7: 13

**முதல் வாசகம் :திருவெளிப்பாடு7 : 2 – 4,9 - 14**

கதிரவன் எழும் திலையிலிருந்து மற்றொரு வானதூதர் எழுந்து வரக்கண்டேன். வாழும் கடவுளின் முத்திரை அவரிடம் இருந்தது. நிலத்தையும் கடலையும் அழிக்க அதிகாரம் பெற்றிருந்த அந்த நான்கு வானதூதர்களையும் அவர் உரத்தகுரலில் அழைத்து, ”எங்கள் கடவுளுடைய பணியாளர்களின் நெற்றியில் நாங்கள் முத்திரையிடும்வரை நிலத்தையோ கடலையோ மரத்தையோ அழிக்கவேண்டாம்” என்று அவர்களிடம் கூறினார். முத்திரையிடப்பட்டவர்களின் எண்ணிக்கைப்பற்றிச் சொல்லக் கேட்டேன். இஸ்ரயேல் மக்களின் குலங்கள் அனைத்திலும் முத்திரையிடப்பட்டவர்கள் ஓர் இலட்சத்து நாற்பத்து நான்கு ஆயிரம்.இதன்பின் யாராலும் எண்ணிக்கையிட முடியாத பெரும் திரளான மக்களைக் கண்டேன். அவர்கள் எல்லா நாட்டையும், குலத்தையும் மக்களினத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள் அரியணைக்கும் ஆட்டுக்குட்டிக்கும் முன்பாக நின்று கொண்டிருந்தார்கள் வெண்மையான தொங்கலாடை அணிந்தவர்களாய்க் கையில் குருத்தோலைகளைக் பிடித்திருந்தார்கள். அவர்கள், ”அரியணையில் வீற்றிருக்கும் எங்கள் கடவுளிடமிருந்தும் ஆட்டுக் குட்டியிடமிருந்துமே மீட்பு வருகிறது” என்று உரத்த குரலில் பாடினார்கள்.அப்பொழுது வானதூதர்கள் அனைவரும் அரியணையையும் மூப்பர்களையும் நான்கு உயிர்களையும் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தார்கள் பின் அரியணைமுன் முகம் குப்புற விழுந்து கடவுளை வணங்கினார்கள்.”ஆமென், புகழ்ச்சியும் பெருமையும் ஞானமும் நன்றியும் மாண்பும் வல்லமையும் வலிமையும் எங்கள் கடவுளுக்கே என்றென்றும் உரியன் ஆமென்” என்று பாடினார்கள். மூப்பர்களுள் ஒருவர், ”வெண்மையான தொங்கலாடை அணிந்துள்ள இவர்கள் யார்? எங்கிருந்து வந்தவர்கள் தெரியுமா?” என்று என்னை வினவினார்.நான் அவரிடம், ”என் தலைவரே, அது உமக்குத்தான் தெரியும்” என்றேன். அதற்கு அவர் என்னிடம் கூறியது ”இவர்கள் கொடிய வேதனையிலிருந்து மீண்டவர்கள் தங்களின் தொங்கலாடைகளை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் துவைத்து வெண்மையாக்கிக் கொண்டவர்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவரை நாடுவோரின் தலைமறையினர் இவர்களே

**இரண்டாம் வாசகம் :1 யோவான் 3 : 1 – 3**

என் அன்பார்ந்தவர்களே நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம் கடவுளின் மக்களாகவே இருக்கிறோம். உலகம் அவரை அறிந்துகொள்ளாததால்தான் நம்மையும் அறிந்து கொள்ளவில்லை.இப்போது நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருக்கிறோம். இனி எத்தன்மையராய் இருப்போம் என்பது இன்னும் வெளிப்படவில்லை. ஆனால் அவர் தோன்றும்போது நாமும் அவரைப்போல் இருப்போம் ஏனெனில் அவர் இருப்பதுபோல் அவரைக் காண்போம்.அவரை எதிர்நோக்கி இருக்கிற அனைவரும் அவர் தூயவராய் இருப்பதுபோல் தம்மையே தூயவராக்க வேண்டும்.

**நற்செய்தி : மத்தேயு 5 : 1–12**

அந்நாட்களில் இயேசு மக்கள் கூட்டத்தைக் கண்டு மலைமீது ஏறி அமர, அவருடைய சீடர் அவரருகே வந்தனர். அவர் திருவாய் மலர்ந்து கற்பித்தவை : ”ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.துயருறுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர். கனிவுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நாட்டை உரிமைச் சொத்தாக்கிக் கொள்வர்.நீதிநிலைநாட்டும் வேட்கை கொண்டோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் நிறைவுபெறுவர். இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்.தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்.அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்.நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறு பெற்றோர் ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே!மகிழ்ந்து பேருவகை கொள்ளுங்கள்! ஏனெனில் விண்ணுலகில் உங்களுக்குக் கிடைக்கும் கைம்மாறு மிகுதியாகும். இவ்வாறே உங்களுக்கு முன்னிருந்த இறைவாக்கினர்˙களையும் அவர்கள் துன்புறுத்தினார்கள்” என்றார்.

**தியானம்:** இயேசுவின் பெயரால் திருமுழுக்குப்பெற்ற நாம் புனித வாழ்வை விரும்ப ஆதங்கப்படுவதுண்டு. புனிதர்கள் நமக்கு அப்பாற்பட்டவர்கள், வியத்தகு வரங்களைப் பெற்றவர்கள் என்றெண்ணாமல், அவர்களும் நம்மைப்போன்ற நிறைகளும், குறைகளும் கொண்டவர்களாக வாழ்ந்தவர்கள் என்பதை நினைத்தால், நாமும் புனிதர்களாக வாழலாம் என்பதனை நற்செய்தி அறிவுறுத்துகின்றது. விண்ணக வாழ்வில் இறைவன் தருகின்ற உயர்ந்த கொடையின் பங்காளிகளான அன்னை மரியாள், நீதிமானான சூசையப்பர் வரிசையில் புனிதர்களாக உயர்த்தப்பட்ட அன்னை தெரேசா, திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் ஆகியோரை நாமறிவோம். இயேசு நம்மைப் பேறுபேற்றோர் என வாழ்த்தவேண்டுமென்றால் புனிதர்கள் வாழ்ந்துகாட்டிய பண்புகளை நாம் கொண்டிருக்கவேண்டும். ஏழையரின் உள்ளத்தோராக, கனிவு உடையோராக, நீதிவேட்கை கொண்டோராக, இரக்கமுடையோராக, தூய்மையுடையோராக, அமைதியை நாடுவோராக, (மத்தேயு5:3-12) துன்பத்தின் நடுவிலும் எல்லாம்வல்ல இறைவனை மாத்திரமே நம்புவோராக அவரது திருப்பாதம் பற்றிப்பிடித்து வாழ்ந்திட இன்றைய நாளுக்கான நற்செய்தி தெரிவிக்கிறது. தமது சாயலாகப் படைக்கப்பட்ட அனைத்து மனிதரையும் இறைவன் அன்புசெய்து, நாம் எவ்வாறு வாழவேண்டுமெனக் கட்டளைகளை வழங்கியுள்ளதால், நாம் நீதியோடு அனைத்து மனிதர்களையும் அன்புசெய்து வாழவேண்டும். நம் சொந்த சக்தியால் பெரிதாக ஒன்றையும் சாதிக்க இயலாது என்பதால், நாம் கடவுளிடம் கையேந்தவேண்டும். அப்போது நம் கைகளை மட்டுமல்ல, நம்முள்ளத்தையும், நம்வாழ்வையும் தம்கொடைகளால் நிரப்புவார் என்பதனையே நற்செய்தி படிப்பிக்கின்றது (மத்தேயு5:6). ஆதலால் அனைத்துப் புனிதர்களது கத்தோலிக்க திரு அவை எனப்படும் குடும்பத்தை சிதறிப்போகாவண்ணம் எமது சாட்சிய வாழ்வால் கட்டிக்காப்பதும், வாழவைத்து வலுப்படுத்துவதும் எமது தலையாய கடமையாகும். இன்றைய உலகில் உண்மையான விசுவாச வாழ்வில் நாட்டமின்றி வாழும் இளையசமூகம் புனிதர்களின் வாழ்வை கடைப்பிடித்து வாழ இந்நாளில் நாம் மண்றாடக் கடமைப்பட்டுள்ளோம். புனிதர்கள் காட்டிய வழியில் நாமும் பயணிப்போம். இறுதிநாளில் முடிவில்லாத பேரரசில் அனைத்துப் புனிதர்களோடு இணைய இறைவனிடம் வரம்வேண்டுவோம்.